DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No: CC.No.86/2018**

**prosecution witness: PW-6**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

**Accused present.**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | சிவசாமி | ஜாதி | : |
| க/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

<u>07.02.2025</u>

<u>முதல் விசாரணை :-</u>

நான் தற்போது திருப்புல்லாணி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.11.2016 தேதி 18.00 மணியளவில் நான் இராமேஸ்வரம் நகர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது இராமேஸ்வரம் முருங்கைவாடியைச் சேர்ந்த நாகரெத்தினம் என்பவர் மனைவி முருகேஸ்வரி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினைப்பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.187/2016, பிரிவுகள். 448, 294(b), 323, 457. 506(1) இதச மற்றும் 4 of TNPHW Act ஆக வழக்கு பதிவு செய்தேன். அந்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகும்.**

2. புகார் வாக்குமூலம், முதல் தகவல் அறிக்கை அசல்களை இராமேஸ்வரம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தும், பிற நகல்களை சம்பந்தப்பட்ட உயர்அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தும், இவ்வழக்கை நான் எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 01.11.2016-ம் தேதி 18.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் நாகரெத்தினம், மாரிமுத்து ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ.5** ஆகும். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6** ஆகும்.

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2025.02.07 18:02:40 +0530

5. பின்பு சாட்சிகள் முருகேஸ்வரி, காந்தி, தவமுருகன், நாகரெத்தினம், மாரிமுத்து ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பெற்றேன்.

6. அதன்பின்பு வழக்கின் எதிரியை 01.11.2016–ம் தேதி 20.30 மணிக்கு முருங்கைவாடி சந்திப்பில் வைத்து கைது செய்து நிலையம் கொண்டுவந்து நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தினேன்.

7.இறுதியாக தனது விசாரணையை முடித்து எதிரிகளின் மீது சட்டப்பிரிவுகள். 448, 294(b), 323, 457. 506(1) இதச மற்றும் 4 of TNPHW Act படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

வீட்டுக்குள் சம்பவம் நடந்ததாக வழக்கு என்றால் காம்பவுண்ட்டுக்கு நடந்ததாக வழக்கு ஆகும். வீட்டிலுள்ள சாமான்களை உடைத்ததாகவழக்கு, எந்தெந்த சாமான்கள் என்று குறிப்பிட்டுசொல்வில்லை என்றால் பாத்திரங்கள் உடைத்ததாக வழக்கு. பாத்திரங்களோ, சான்றுபொருட்களையோ கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கை பொறுத்தவரை புகார்தாரருக்கோ, வேறு எதுவும் நபர்களுக்கோ வெளிப்படையான காயங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். எதிரியின் இடத்தை புகார்தாரரை அபகரித்துக்கொண்டதன் பெயரில் தான் பிரச்சனை ஏற்பட்டு எதிரி எங்களது காவல்நிலையத்தில் புகார் வாக்குமூலம் அளித்துள்ளார் என்றால் சரிதான். அதன்பின்னர் புகார்தாரரை விசாரணைக்கு அழைத்தன் பெயரில் நடக்காத சம்பவத்திற்கு நடந்ததுபோல் அபகரித்துக்கொண்ட இடத்தை தக்க வைப்பதற்காக பொய்யாக புகார் மனு கொடுத்தார் என்றால் சரியல்ல. பொது இடத்தில் வைத்து தன்னை அசிங்கமாக திட்டியதாகவோ, அதனால் அவமானம் ஏற்பட்டதாகவோ, மானபங்கம் ஏற்பட்டதாகவோ, கொலைமிரட்டல் விடுத்ததாகவோ, உயிருக்கு அச்சுறுத்தல், பயம் ஏற்பட்டதாகவோ புகார்தாரர் தனது புகாரிலோ, போலீசார் விசாரணையிலோ, இறுதி அறிக்கையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 1 முதல் 5 சாட்சிகள் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அக்கம்பக்கத்தில் உள்ளவர்களையும், பொதுவான நபர்களையும் இந்த வழக்கில்சாட்சியாக சேர்த்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் எந்தவொரு விசாரணையும் செய்யாமல் ஆவணங்கள் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றால் சரியல்ல.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.02.07 18:02:44 +0530